தமிழ்நாடுஅரசு
நீர்வளத்துறை

விசுவாவசு வைகாசி,
திருவள்ளுவர் ஆண்டு 2056

அனுப்புநர்:
பொறிஞர்.ப.திருமூர்த்தி,பி.இ.,
செயற்பொறியாளர்,நீ.வ.து.,
கீழ்பவானிவடிநிலகோட்டம்,
ஈரோடு-2. ☎ 0424-2259474

பெறுநர்:
உரிமையாளர் திருமதி.சங்கீதா
பொது அதிகாரம் பெற்ற முகவர்
திரு. V.S.தங்கவேல்,
த/பெ.சொங்கப்பகவுண்டர்,
கதவுஎண்.60, பாசூர்(அஞ்சல்),
சோளங்காபாளையம்,
புஞ்சை கிளாம்பாடி கிராமம்,
கொடுமுடி வட்டம்,
ஈரோடு மாவட்டம்.

**கடிதஎண்: வ.3 /கோ.107/ 240ᴹ / 2025/ நாள்: 28 .05.2025**

ஐயா,

பொருள்: கீழ்பவானி பாசனத் திட்டம் - ஈரோடு மாவட்டம் - மொடக்குறிச்சி வட்டம்- புஞ்சை காளமங்கலம் ஆ கிராமம் ரீ.ச.எண்.635/2B-ல் உள்ள நிலத்திற்கு சென்று வர புஞ்சை காளமங்களம் வாய்க்கால் தலை மதகிலிருந்து 10.60 கி.மீ தொலைவில் அமைந்துள்ள உத்தண்டிபாளையம் கிளை வாய்க்காலின் மைல் 2-2-280-ல் அமைந்துள்ள இடது புற நேரடி மதகின் கொப்பு வாய்க்காலின் 150.00-வது மீட்டர் தொலைவில் உள்ள வாய்க்காலின் குறுக்கே சிறுபாலம் (RCC Culvert) கட்ட அனுமதி வழங்குதல் - குறித்து.

பார்வை:
1. தங்களது விண்ணப்ப நாள்: இல்லை.
2. உதவிசெயற்பொறியாளர்.நீ.வ.து.,கீழ்பவானி வடிநில உபகோட்டம் எண்.1, ஈரோடு அவர்களின் கடித எண். 489,504/கோ.37/ உ.செ.பொ.1/ 2025/ நாள்: 15.05.2025.

***************

பார்வை 1-ல் கண்ட தங்களது விண்ணப்பத்தின் பேரிலும்,பார்வை 2-ல் காணும் உதவிசெயற்பொறியாளர்,நீ.வ.து., கீழ்பவானி வடிநில உபகோட்டம் எண்.1, ஈரோடு அவர்களின் பரிந்துரையின் படியும், கிராம நிர்வாக அலுவலர் சான்று மற்றும் வருவாய்த்துறை ஆவணங்களின்படியும், ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், புஞ்சை காளமங்கலம் ஆ கிராமம் ரீ.ச.எண்.635/2B-ல் உள்ள நிலத்திற்கு சென்று வர புஞ்சை காளமங்களம் வாய்க்கால் தலை மதகிலிருந்து 10.60 கி.மீ தொலைவில் அமைந்துள்ள உத்தண்டிபாளையம் கிளை வாய்க்காலின் மைல் 2-2-280-ல் அமைந்துள்ள இடது புற நேரடி மதகின் கொப்பு வாய்க்காலின் 150.00-வது மீட்டர் தொலைவில் உள்ள வாய்க்காலின் குறுக்கே தங்களது சொந்த செலவில் கீழ்கண்ட அளவுகளில் சிறுபாலம் அமைக்க பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு தற்காலிக அனுமதி வழங்கப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1. புஞ்சை காளமங்களம் வாய்க்கால் தலை மதகிலிருந்து 10.60 கி.மீ தொலைவில் அமைந்துள்ள உத்தண்டிபாளையம் கிளை வாய்க்காலின் மைல் 2-2-280-ல் அமைந்துள்ள இடது புற நேரடி மதகின் கொப்பு வாய்க்காலின் 150.00-வது மீட்டர் தொலைவில் உள்ள வாய்க்காலின் குறுக்கே சிறுபாலம் கீழ்கண்ட அளவுகளில் அமைக்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1 | பாலத்தின் கண்ணறையின் அகலம் | : 0.60 மீட்டர் |
| 2 | பாலத்தின் கண்ணறையின் உயரம் | : 0.60 மீட்டர் |
| 3 | பாலத்தின் நீளம் | : 9.00 மீட்டர் |

2. நீர்வழிப்பாதையின் (Linear Water way) அளவு. எந்தவகையிலும் குறையாமல் பார்த்துக் கொள்வதுடன்,அதிகநீர் வெளியேற்றுத்திறனும் (MFD) குறையக்கூடாது.
3. சிறுபாலம் நீரியல் விபரங்கள் மாறாமல் இத்துறைபொறியாளர்களின் முன்னிலையில் அமைக்கப்படவேண்டும்.
4. சிறுபாலம் அமையப்பெறும் போது,இந்தபாதையை (பாதசாரிகள்) பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு தாங்கள் எவ்வித தடையும் ஏற்படுத்தக்கூடாது.
5. சிறுபாலம் அமையப்பெற்ற பின்பு இதில் தாங்கள் வரும் காலங்களில் அரசின் அனுமதி இல்லாமல் விரிவுபடுத்தவோ அல்லது அதன் அமைப்பில் மாற்றம் செய்யவோ கூடாது.
6. சிறுபாலம் பிற்காலத்தில் அரசுக்கு தேவைப்படும் பட்சத்திலோ அல்லது இடையூராக உள்ளது என கருதப்படும் பட்சத்தில் எவ்வித முன்னறிவிப்புமின்றி துறை மூலம் அகற்றப்படும். இதற்கு எந்த நஷ்ட ஈடும் கோரக்கூடாது.
7. சிறுபாலத்திற்கு அனைத்து கட்டுமானச் செலவுகளையும் தங்களது சொந்த செலவில் ஏற்றுக்கொள்ள வேண்டும். தாங்கள் சிறுபாலம் கட்டுமானத்தின் பொழுது வாய்க்காலின் கரைகளுக்கோ அல்லது குறுக்கு கட்டுமானங்களுக்கோ எவ்வித சேதமும் ஏற்படுத்தக்கூடாது. தவறிசேதமேதும் ஏற்பட்டால் அதனை தங்களது சொந்த செலவில் சரிசெய்து கொடுக்க வேண்டும்.
8. மேற்கண்ட சிறுபாலத்திற்கு தரை வாடகையாக ஆண்டுதோறும் ரூ.500/-(ரூபாய் ஐநூறு மட்டும்) ஜுலை 1-ஆம் தேதிக்குள் இத்துறைக்கு (உதவிப்பொறியாளர் அலுவலகம்) செலுத்தப்படவேண்டும்.
9. சிறுபாலம் தங்களது சொந்த செலவில் கட்டப்பட்டாலும்,சிறுபாலம் கட்டப்பட்ட பின்னர் இத்துறைக்கு ஒப்படைக்கப்படும் சிறுபாலத்திற்கு தாங்களோ அல்லது தங்களை சார்ந்தவர்களோ எவ்வித உரிமையும் கோரக்கூடாது.
10. சிறுபாலம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் அப்பாலத்தில் செல்லும் வாகனங்களுக்கு சிறுபாலம் கட்டுவதற்கான செலவினை ஈடு கட்டுவதற்காகவோ அல்லது மற்ற காரணங்களுக்காகவோ தாங்கள் கட்டணம் ஏதும் வசூலிக்கக் கூடாது.

11. சிறுபாலம் தங்களுக்கு எந்த பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டதோ அந்த பயன்பாட்டிற்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும், வேறு எந்த விதமான பயன்பாட்டிற்கு பயன்படுத்தினால் இந்த அனுமதி ரத்து செய்யப்பட்டதாகவே கருதப்படும். மேலும், நீதிமன்ற வழக்குகள் ஏதும் தொடரக்கூடாது.

12. சிறுபாலம் அமைக்க அனுமதி கிடைத்த நாட்களிலிருந்து 1 வருடகாலத்திற்குள் பாலத்தின் கட்டுமான பணிகள் அனைத்தும் முடிக்கப்பட வேண்டும். இல்லையெனில், சிறுபாலம் அமைப்பதற்கான இவ்வனுமதி இரத்து செய்யப்படும்.

13. தங்களால் குறித்த காலவரம்பிற்குள் பாலம் கட்டி முடிக்கப்பட்டவுடன் கட்டி முடிக்கப்பட்ட பாலத்தின் புகைப்படங்களை இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

14. தங்களால் வழங்கப்பட்ட ஆவணங்கள் போலியானது எனப் பின்னர் தெரியவருமாயின் மற்றும் பொதுமக்கள் ஆட்சேபனை தெரிவிக்கும் பட்சத்தில் வழங்கப்பட்ட தற்காலிக அனுமதி எவ்வித முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படுவதுடன், தகுந்த குற்றவியல் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கப்படும்.

15. தாங்கள் மேற்கண்ட14 (பதிநான்கு) நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவதாக ரூ.200/- மதிப்புள்ள பதிவுத்துறை முத்திரைத்தாளில் சம்மதக் கடிதம் எழுதிக் கையொப்பமிட்டு, இரு நபர்கள் சாட்சிக் கையொப்பமுடன் இத்துறைக்கு உதவிசெயற்பொறியாளர்,நீ.வ.து., கீழ்பவானி வடிநில உபகோட்டம் எண்.1, ஈரோடு மூலம் வழங்கிட வேண்டும்.

16. மேற்கண்ட சிறுபாலம் அமைக்க காப்புத் தொகையாக ரூ.5000/-ஐ (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) கணக்கு தலைப்பு 0701-03-116-AC-29001 என்ற கணக்குத் தலைப்பில் மின்னணு இரசீது (E-challan) மூலம் செயற்பொறியாளர், நீர்வளத்துறை, கீழ்பவானி வடிநில கோட்டம், ஈரோடு-2 அவர்களின் பெயரில் செலுத்தி செலுத்துச்சீட்டை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைத்திட வேண்டும். காப்புத் தொகைகட்டியதற்கான அசல் ரசீதும், முத்திரைத்தாளில் சம்மதம் தெரிவிக்கும் பத்திரமும் இவ்வலுவலகத்திற்கு கிடைக்கப் பெற்ற பின்னரே சிறுபாலம் கட்டும் பணியினை துவக்க வேண்டும்.

27/5/2025

செயற்பொறியாளர்,நீ.வ.து.,
கீழ்பவானிவடிநிலக் கோட்டம்,ஈரோடு-2.

27/5/25












TN31BS1616
GPS Map Camera
Google
Modakurichi, Tamil Nadu, India
6rpj+x9f, Modakurichi, Tamil Nadu 638153, India
Lat 11.238737° Long 77.831464°
Monday, 23/02/2026 08:49 AM GMT +05:30


GPS Map Camera
Modakurichi, Tamil Nadu, India
6rpj+x9f, Modakurichi, Tamil Nadu 638153, India
Lat 11.238446° Long 77.831394°
Monday, 23/02/2026 08:43 AM GMT +05:30
Google


HONDA
GPS Map Camera
Modakurichi, Tamil Nadu, India
6rpj+x9f, Modakurichi, Tamil Nadu 638153, India
Lat 11.238634° Long 77.831465°
Monday, 23/02/2026 08:43 AM GMT +05:30
Google


GPS Map Camera
Modakurichi, Tamil Nadu, India
6rpj+x9f, Modakurichi, Tamil Nadu 638153, India
Lat 11.238672° Long 77.831467°
Monday, 23/02/2026 08:43 AM GMT +05:30
Google


GPS Map Camera
Google
Modakurichi, Tamil Nadu, India
6rpj+x9f, Modakurichi, Tamil Nadu 638153, India
Lat 11.238734° Long 77.831467°
Monday, 23/02/2026 08:44 AM GMT +05:30